**தேசிய போக்குவரத்து நிறுவகம் - 2013**

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயற்பாடுகளின் கூற்று நிதிநிலை மாற்றக்கூற்று, காசோட்டக்கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு, 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 பஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்க் குறிப்பிடும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெருந்தெருக்கள், துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட காணித்துண்டமொன்றிற்காக ரூபா 21,703,500 பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டிருந்தன. சொத்துக்களை அகற்றியதன் விளைவுகளை அறிந்துகொள்வதற்குத் தேவையான சீராக்கங்கள் செய்யப்படாதிருந்ததுடன், பெறப்பட்ட நன்மைகளை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றியதன் காரணமாக, அகற்றப்பட்ட காணித்துண்டின் பெறுமதி நிறுவகத்தின் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்களால் அவர்களது நம்பிக்கைப் பொறுப்புக் காப்புறுதி பிணையான ரூபா 78,876 நிறுவகத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புவைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தமை வெளிப்பட்ட போதிலும் இக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளில் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, நிதி நிலைக் கூற்றின் படி நம்பிக்கைப் பொறுப்பு பிணைவைப்பாக ரூபா

10,966 காட்டப்பட்டிருந்த போதிலும் இதற்குத் தொடர்பான ஒரு சொத்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்கீட்டுக் குறைபாட்டின் காரணமாக மீளாய்வாண்டில் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 152,951 ஆன தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கடந்த ஆண்டில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 100,000 ஆன விரிவுரைக் கட்டணம் அட்டுறுவாக அல்லது பொருத்தமான முறையில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இத்தொகையில் ரூபா 50,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும், அது மீண்டெழும் செலவுக்கு வரவு வைக்கப்பட்டதால் ஆண்டின் இறுதியில் சென்மதியாகவிருந்த செலவு ரூபா 50,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பெறவேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா 65,169 ஆல் குறைத்துக் கணக்குவைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிளை அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் இடர்க்கடன் பதிவேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களிற் காட்டப்பட்டிருந்த பெறுமதிகளுக்குமிடையே இருந்த ரூபா 799,561 வேறுபாடு சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றுக்கான கிளைகளுக்கும் தலைமையலுவலகத்திற்குமான கொடுப்பனவுகள் கொடுக்கல் வாங்கல்கள் ஒன்றிற்கொன்று சரியீடு செய்யப்படாமல் கிளைகளினால் பெறப்படவேண்டிய மற்றும் கிளைகளினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் சொத்துக்களாகவும் பொறுப்புக்களாகவும் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இக் கணக்குகள் முறைப்படி இணக்கம் செய்யப்பட்டு தீர்வு செய்யப்படாத காரணத்தால் இரு கணக்குகளுக்குமிடையே ரூபா 702,695 ஆன வேறுபாடு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கைப் போக்குவரத்து சபைக்கு வைத்திய சேவைகள் வழங்கியதன் பொருட்டு பெறப்படவேண்டிய மொத்தம் ரூபா 3,116,976 ஆன தொகை இருந்ததுடன் அது கணக்காய்வுத் திகதியான 2014 மே 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் நுகேகொடை வளாகத்தில் இயங்கிய மெட்றோபொலிரன் பேருந்துக் கம்பனி 2012 டிசெம்பர் மாதத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இக்கம்பனிக்கு நிறுவகத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்புச் சேவையின்

பொருட்டு அறவிடப்பட வேண்டிய கட்டணமான ரூபா 742,312 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் நுகேகொடை வளாகத்தில் இயங்கிய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சாரதி பயிற்சிப்பாடசாலையிடமிருந்து அறவிடப்படப் வேண்டிய இரண்டு வருடங்களுக்கான வாடகை ரூபா 120,000 ஆன தொகை அறவிடப்படாதிருந்ததுடன், வாடகை உடன்படிக்கைக் காலம் 2011 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்தும் அந்த உடன்படிக்கையைப் புதுப்பிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புச் சேவைக்காக கட்டணம் கொடுப்பனவு செய்யும் போது மொத்த சேவைக் கட்டணத்தில் 1/5 பகுதி தொகை சாரதி பயிற்சிப் பாடசாலைக்கு பாதுகாப்புச் சேவை வழங்கியதன் வகையால் குறைத்துக் கொடுப்பனவு செய்ய இணங்கியிருந்தும் அவ்வாறு செய்யாமல் மொத்தத் தொகைக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 1,726,180 ஆன தொகை இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து நிறுவகத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 10,484,219 ஆன தொகையை நிறுவகத்தால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,549,767 ஆன தொகைக்கெதிராக சரியீடு செய்து கணக்குகளிலிருந்து அகற்ற 2011 ஜுலை மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தும் இது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒருமைப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) குருணாகல மற்றும் காலி கிளைகள் தமது கட்டிட வாடகை உடன்படிக்கைகளின் காலம் முடிவடைவதற்கு முன் விலகிக் கொள்வதற்காக ரூபா 135,500 ஆன பாதுகாப்புப் பிணைத்தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் அமைந்தொழுகாமை

பின்வரும் அமைந்தொழுகாமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | அமைந்தொழுகாமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 22 ஆம் திகதியிட்ட பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களிலும், திறைசேரி உண்டியல்களிலும் முறையே ரூபா 24,080,000 மற்றும் ரூபா 254,910,018 ஆன தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்தும் இதற்காக நிதி அமைச்சரினது ஒருப்பாடும் தொடர்பான அமைச்சரின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xiv ஆம் அத்தியாயம் 1.3 ஆம் பிரிவு | அரச கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு இணைந்த படிகளுக்கு மேலதிகமாக மீளாய்வாண்டினுள் தங்குமிடத்திற்காக ரூபா 142,062 உம் உணவுக்காக ரூபா 46,180 உம் ஆன தொகைகள் நிறுவகத்தினால் மீள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 102 | வருடாந்த வரித்தொகை சனவரி 31 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் போது நூற்றுக்கு 10 வீதக்கழிவு வழங்கப்படும் என விலைமதிப்பீட்டு அறிவித்தல்களில் காட்டப்பட்டிருந்தும் குறித்த திகதிக்கு முன்னர் தொகையைச் செலுத்தி ரூபா 49,153 ஆன கழிவு நன்மையைப் பெறாதிருந்ததுடன், தாமதமாகப் பணம் செலுத்தியமைக்காக ரூபா 50,192 ஆன தண்டப் பணமும் செலுத்த வேண்டியிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 757(2)(ஆ) | பொருள் கணிப்பீட்டுச் சபையின் கடமை முடிவுபெறாமையால் அதன் பிரதி குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட இயலாதிருந்தது. |
| (ஈ) 1997 பெப்ரவரி 03 திகதியிட்ட 7/97 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | நிறுவகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு அனுமதியின்றி மாதத்திற்கு ஒரு நாளுக்கு மேல் கடமையாற்றியதற்காக 1/20 கொடுப்பனவாக ரூபா 43,828 ஆன தொகை மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. அந்த அலுவலர் கைவிரல் அடையாள இயந்திரம் செயற்பாட்டில் இருந்த போதிலும் அந்த நாட்களில் மாத்திரம் கைவிரலடையாள இயந்திரத்தில் வருகையைப் பதிவு செய்யாமை காரணத்தால் 8 மணித்தியாலங்களுக்குக் குறையாத நேரம் கடமையாற்றியதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2008 டிசெம்பர் 31 திகதியிட்ட 31/2008 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவும் 1994 யூன் 14 திகதியிட்ட 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையும் | ஓர் அலுவலருக்குக் செலுத்தக்கூடிய உச்ச பண்டிகை முற்பணம் ரூபா 5,000 ஆக இருப்பினும் ரூபா 25,000 ஆகச் செலுத்தியமையால் மீளாய்வாண்டினுள் ரூபா 1,960,000 ஆன தொகை மேலதிகமாகக் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2011 டிசெம்பர் 12 திகதியிட்ட 27/2011 இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவும் 1994 யூன் 14 திகதியிட்ட 95 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையும் | ஓர் அலுவலருக்குக் கொடுக்கக்கூடிய உச்ச விஷேட முற்பணம் ரூபா 2,500 ஆக இருப்பினும் ரூபா 25,000 ஆகக் செலுத்தியமையினால் மீளாய்வாண்டினுள் ரூபா 4,445,000 ஆன தொகை மேலதிகமாகக் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இத்தொகைக்காக வட்டி அறவிடப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக இழக்கப்பட்ட வருமானம் ரூபா 396,600 ஆகும். |
| (எ) | 2003 யூன் 02 திகதியிட்ட பிஈடி/12 இலக்க பொதுமுயற்சிகல் சுற்றறிக்கையின் 8.3.3(சீ) பந்தியும், 2012 டிசெம்பர் 24 திகதியிட்ட 49 ஆம் இலக்க முகாமைச்சேவைகள் சுற்றறிக்கையும் | மிகையூதியம் அல்லது ஊக்குவிப்புப் படி எனும் இரண்டில் ஒன்று மாத்திரமே வழங்கப்படலாமெனினும், மீளாய்வாண்டினுள் மிகையூதியமாக ரூபா 2,346,025 உம் ஊக்குவிப்புப் படியாக ரூபா 1,809,625 உம் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த ஊக்குவிப்புப் படி தொடர்பாக முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 1994 யூன் 14 திகதியிட்ட 95 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | கணக்காளரினால் கிளைகளில் கடமை புரிந்தமைக்காக முறையான அனுமதியின்றி ஒரு மாதத்திற்கு ரூபா 3,000 ஆக மீளாய்வாண்டினுள் ரூபா 36,000 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2008 யூலை 28 ஆந் திகதியிட்ட பிஈடி/50 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் 2011 பெப்ரவரி 9 திகதியிட்ட 13/2008(iv) இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையும் | மாதாந்த எரிபொருள்படியைப் பெறுவதற்கு உரித்தற்ற III ஆம் வகுப்பு கணக்காளர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 12,500 வீதம் ரூபா 150,000 ஆன எரிபொருள் படி மீளாய்வாண்டினுள் கொடுக்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2002 நவம்பர் 28 திகதியிட்ட திறைசேரிச் செயலாளரின் ஐஏஐ/2002/2 இலக்க சுற்றறிக்கை | கணினி உதிரிப்பாகங்கள், மென்பொருட்கள் தொடர்பாக ஒரு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் மிகையாக ரூபா 111,201,907 ஆக இருந்ததுடன், இதற்கெதிராக முன்னைய ஆண்டின் குறைவு ரூபா 13,979,214 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 125,181,121 ஆன அதிகரிப்புக் காணப்பட்டது சாரதி அனுமதிப் பத்திரம் பெறும்போது பெறப்பட வேண்டிய மருத்துவச் சான்றிதழ் இந்த நிறுவகத்தின் மூலம் மாத்திரமே பெறப்படுவதற்கு போக்குவரத்து அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டதனால் வைத்தியசேவை வருமானம் நூற்றுக்கு 126 வீதம் அதிகரித்தமை இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின்படி முன்னேற்றத்தை அளவிடுவதற்கு நிதிசார் செயலாற்றல் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையின்படி நிதிசார் முன்னேற்றம் நூற்றுக்கு 20 வீதத்திற்கும் குறைவாக இருந்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) செயற்பாட்டுத் திட்டமொன்று இல்லாத காரணத்தால் பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவது எந்தத் துறையில், யாரால் எவ்வளவு காலத்திற்கு என்பவை அவதானிக்கப்படாமல் இருந்ததுடன் கணக்கு மற்றும் நிருவாகப் பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு கற்கைநெறிகளை நடத்துவதற்கு 24 பேருக்கு ரூபா 301,000 செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் கண்டிக் கிளை அலுவலகம் நிறுவுவது தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் 0.0472 ஹெக்ரயர் அரச காணித்துண்டொன்று பெறப்பட்டிருந்ததுடன், அங்கு கட்டிடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் மாதாந்தம் ரூபா 55,000 வாடகை கொடுத்து தனியார் கட்டிடமொன்றில் நடத்தியதால் மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 660,000 ஆன தொகை வாடகையாகக் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) இரத்தினபுரி கிளை அமைப்பது தொடர்பாக காணி பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அரம்பக் கட்டணமாக ரூபா 100,000 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட குத்தகை நிலம் போதுமானதாக இல்லாததால் அதனை நிராகரித்திருந்ததுடன் இத்தொகையை மீளப்பெறுவதற்கு அல்லது கழித்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அநுராதபுரம் கிளைக்கு பாதுகாப்புக் கட்டிடம் அமைப்பதற்கும் வர்ணம் பூசுவதற்குமாக மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்காக ரூபா 10,000 ஆன தொகை 2012 பெப்ரவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தமையுடன் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் கூட குறிப்பிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்திற்குச் சொந்தமான ஒரு மோட்டார் வாகனம் விபத்திற்குட்பட்டதால் அதனைத் திருத்துவதற்கு ரூபா 55,229 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 42,114 ஆன தொகை காப்புறுதி நட்டஈடாகப் பெறப்பட்டிருந்ததுடன், காப்புறுதியினுள் உள்ளடக்கப்படாத ரூபா 13,115 ஆன தொகையை பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிடமிருந்து அறவிடாமல் திருத்தச் செலவுகளின் கீழ் வருமானத்திற்கெதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(உ) நிறுவகத்தின் வேரஹெர கிளைக் கட்டிடத்தைப் புனரமைத்தல் தொடர்பாக ரூபா 5,058,577 மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தும் நிறுவகத்திற்கு காணி கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தால் பேணப்பட்டுவரும் நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு சொத்தினது பெறுமதியும் குறிப்பிடப்படாதிருந்தது.

(எ) முன்னாள் தலைவர் உபயோகித்த செல்லிடப்பேசி மீளவும் நிறுவகத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் அவரால் தொலைக்கப்பட்ட மற்றுமொரு தொலைபேசி தொடர்பிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) களுத்துறை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தால் களுத்துறை பொதுவைத்தியசாலைக்கு அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பாக நிதியுதவி வழங்குமாறு தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் வைத்தியசாலைப் பணிப்பாளரால் கேட்கப்பட்டிருந்த ஓர் உபகரணங்களின் பட்டியலும் அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த உபகரணப் பட்டியலில் குறிப்பிடப்படாத ஒரு சலவை இயந்திரம் ரூபா 33,210 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு சட்டத்தரணிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன். இச் சலவை இயந்திரம் சட்டத்தரணிகள் சங்கத்தால் கையேற்கப்பட்டதாகவோ களுத்துறை பொது வைத்தியசாலையால் கையேற்கப்பட்டதாகவோ உறுதிப்படுத்துவதற்கு எவ்வித ஆவணச் சான்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிறுவகத்திற்குத் தேவையான மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவசரத் தேவைகளுக்காக மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக ரூபா 40,000 கட்டு நிதி அலுவலர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் இருக்கும் போது தொடர்ந்து முறையான அனுமதியின்றி அவசர தேவைகள் எனக் கருதி இந்தக் கட்டுநிதி மூலம் கொள்வனவு செய்தல் இடம்பெற்றமை.

(ii) முறையான கொள்வனவு நடைமுறையின் கீழ் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தும் முறைமையை அறிமுகப்படுத்தியிராமை.

(iii) பணம் செலுத்துதல் தொடர்பாக கட்டுப்பாட்டு முறையொன்றினை அறிமுகப்படுத்தியிராமையும் காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல் தொடர்பக கவனம் செலுத்தியிராமையும்.

**4.3 ஆளணி நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்திற்காக அனுமதிக்கப்பட்ட ஆளணியையும் மீளாய்வாண்டில் உண்மையான ஆளணியை ஒப்பிடும் போது 127 அலுவலர்களில் மிகையும் 30 அலுவலர்களில் குறைவும் நிலவின.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கான நிறுவகத்தின் நிறுவனத்திட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்டிருந்தது. 2003 யூன் 02 ஆம் திகதியிட்ட பீஈடி/12 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஈ) ஆம் பிரிவின்படி நிறுவனத்திட்டமும் அனுமதிக்கப்பட்ட ஆளணியும் பொதுமுயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்திற்குரிய ஆட்சேர்ப்புத்திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்படாதிருப்பினும் எவராவது ஊழியர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும்போது அப்பதவி தொடர்பாக அவசியமான குறைந்தபட்ச தகைமையையாவது பூர்த்தி செய்திருக்க வேண்டியிருப்பினும் அவ்வாறு குறைந்தபட்ச தகைமையையாவது பூர்த்தி செய்யாத நபரொருவர் முகாமைத்துவ உதவியாளராக (எழுதுநர்) ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார்.

(ஈ) 2003 யூன் 02 திகதியிட்ட பீஈடி/12 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவுக்கமைய திறைசேரியின் அனுமதியின்றி அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு உரிமையற்ற நிருவாக விரிவுரையாளர் பதவிக்கு பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் ரூபா 299,700 ஆன கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

**4.4 வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் சொத்துக்கள்**

பீஈடி/12 இலக்கமிடப்பட்ட 2003 யூன் 02 திகதிய பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.9 ஆம் பந்திக்கு முரணாக நிறுவகத்தின் சாரதியொருவர் போக்குவரத்து அமைச்சரின் இணைப்புச் செயலாளரது சாரதியாக 2012 யூன் 12 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டிருந்தார். இதற்காக 2012 யூன் தொடக்கம் 2013 நவம்பர் வரை சம்பளம் மற்றும் மேலதிக நேரமாக ரூபா 531,287 உம் பிரயாணக் கொடுப்பனவாக ரூபா 45,585 உம் நிறுவகத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயற்பாட்டுத் திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதியிட்ட பிஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 மற்றும் 5.1.3 ஆம் பந்திகளின் படி வருடத்திற்காகத் திட்டமிடப்பட்ட காலத்தினுள், நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளும் வகையில் ஒரு செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

அரச கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் ஒதுக்கங்களையும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பிடும் போது நூற்றுக்கு 14 வீதம் தொடக்கம் நூற்றுக்கு 465 வீதம் வரையான வீச்சுக்களில் முரண்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு பயனுள்ள நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் 2014 யூன் மாத இறுதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) ஊழியர் கடன்
(இ) கடன்கொடுத்தோர்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஆளணி நிருவாகம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு